DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 15 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. கார்த்திக் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5th day of March 2026.

**(A1, A2 Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசி அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்துவருகிறேன். நான் தென்காசி அரசு மருத்துவமனையில் கடந்த 24.04.2022 அன்று பணியில் இருந்தபோது, மாரிச்செல்வம் என்ற 20 வயதுமிக்க இறந்த நபருக்கு உடற்கூராய்வு செய்துதரும்படி காவல் ஆய்வாளர், தென்காசி அவர்களிடமிருந்து காவலர் திரு. தங்கதுரை என்பவர் மூலமாக ஒரு வேண்டுகோள் கடிதம் பெற்றேன். அன்றைய தினம் பிற்பகல் 12.15 மணிக்கு

பிரேத பரிசோதனை தொடங்கப்பட்டது. பிரேதத்தின் மீது உடல் முழுவதும் விறைப்புத்தன்மை காணப்பட்டது. கீழ்க்கண்ட காயங்கள் இறப்பிற்கு முன்னர் ஏற்பட்டதாக கண்டறியப்பட்டன.

1) 6 x 3 x 5 cm அளவிலான வெட்டுக்காயம் வலது பக்க கழுத்தின் பட்டை எலும்பிற்கு மேல் மூச்சுக்குழாய், உணவுக்குழாய் மற்றும் கழுத்தின் முக்கிய ரத்தநாளங்கள் ஆகியவை வெட்டப்பட்டு காணப்பட்டன.

2) 5 x 3 x 2 cm அளவிலான தசை ஆழம் கொண்ட வெட்டுக்காயம் வலது தோள்பட்டையில் காணப்பட்டது.

3) 3 x 3 x 2 cm அளவிலான வெட்டுக்காயம் வலது கையில் காணப்பட்டது.

4) 3 x 3 x 2 cm அளவிலான எலும்பின் ஆழம் கொண்ட வெட்டுக்காயம் இடது கையில் 4 வது விரலில் காணப்பட்டது. தசை தோலோடு மேற்படி விரல் தொங்கிக்கொண்டிருந்தது.

5) 3 x 2 x 1 cm அளவிலான எலும்பு ஆழம் கொண்ட வெட்டுக்காயம் இடது கை பெருவிரலில் காணப்பட்டது.

6) 7 x 5 x 5 cm அளவிலான எலும்பு ஆழம் கொண்ட வெட்டுக்காயம் இடது முழங்கையில் 2 எலும்பு முறிவுகளோடு காணப்பட்டது.

7) 3 x 2 x 2 cm அளவிலான தசை ஆழம் கொண்ட வெட்டுக்காயம் இடது காதில் தோலில் தொங்கியபடி காணப்பட்டது.

8) 5 x 3 x 2 cm அளவிலான வெட்டுக்காயம் இடது பக்க தலையில் காணப்பட்டது.

9) 5 x 3 cm அளவிலான தீக்காயம் வலது காலில் வெளிப்புறம் காணப்பட்டது.

10) 2 x 1 cm அளவிலான சிராய்ப்பு காயம் வலது கால் பாதத்தில் காணப்பட்டது.

அனைத்து உள்ளுறுப்புகளும் இயல்பாகவும், அதன் வெட்டு ஆய்வில் வெளிறி காணப்பட்டன. இறந்த நபர் தனக்கு ஏற்பட்ட காயங்களின் விளைவுகளால் இறந்திருக்கிறார் என்று கருத்து தெரிவித்து நான் பிரேத பரிசோதனை சான்று வழங்கினேன். நான் வழங்கிய அந்த **பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ. 9** ஆகும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும்

அரிவாளால் ஒரு நபரை வெட்டும்போது மேற்சொன்ன 1 முதல் 8 வரையிலான காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

காயத்தின் போக்கு தன்மை எவ்வாறு உள்ளது என்ற விவரம் அ.சா.ஆ. 9 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அரிவாள் போன்ற ஆயுதத்தால் ஒரு நபரை வெட்டி காயப்படுத்தும்போது, அதில் ஏற்படும் முதன்மை பகுதி மற்றும் இறுதி பகுதி எது என்ற விவரம் தெரியவரும் என்றும், அந்த விவரம் பிரேத பரிசோதனை சான்றில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக, வலது கை பழக்கம் உள்ள ஒரு நபர் வேறொரு நபரை வெட்டும்போது வெட்டுப்படும் நபரின் இடது பக்க பகுதியில் அதிகமான காயங்கள் ஏற்படும் என்று சொன்னால் அதற்கு வாய்ப்புண்டு. 1, 2 காயங்கள் இறந்துபோன நபரின் வலது பக்க கழுத்து மற்றும் தோள்பட்டையில் காணப்பட்டன என்றால் சரிதான். காயத்தின் போக்கு குறிப்பிடப்படாத காரணத்தினால் அவர் முன்னால் இருந்து வெட்டப்பட்டாரா அல்லது பின்னால் இருந்து வெட்டப்பட்டாரா என்ற விவரம் துலங்காது என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அரிவாள் கோழிவால் அரிவாள் என்றால் சரிதான். மேற்படி அரிவாளின் கூர்மையான பகுதி ஒரு நபரின் மீது படும்போது முதலில் ஒரு குத்துக்காயம் ஏற்படும் என்று சொன்னால் சரிதான். அதனை தொடர்ந்து கிழிந்த காயமும் ஏற்படும் என்றால் சரிதான். 1, 2 காயங்களில் குத்துக்காயம் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதனால் 1, 2 காயங்கள் வெட்டரிவாள் போன்ற வேறு வகை அரிவாளால் கூட ஏற்படுத்தியிருக்கமுடியும் என்றால் அதற்கு வாய்ப்புண்டு. 1 முதல் 8 வரையிலான காயங்களை ஏற்படுத்த ஒன்றுக்கும் அதிகமான வெட்டரிவாள்கள் பயன்படுத்தியிருக்க வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு.

இறந்துபோன நபரின் வயிற்றில் பகுதி செரிமானமான உணவு பொருட்கள் இருந்த காரணத்தினால் அவர் இறப்பதற்கு 1 – 01.30 மணி நேரத்திற்கு முன்னர்

உணவு உட்கொண்டிருக்க வேண்டும் என்றால் சரிதான். இறந்துபோனவரின் பிரேதம் குளிரூட்டப்பட்ட பிணவறையில் வைக்கப்பட்டிருந்த காரணத்தினால் பிண விறைப்புத்தன்மையை வைத்து அவர் எப்போது மரணமடைந்தார் என்பதை துல்லியமாக சொல்லமுடியாது என்றால் சரிதான். பிணவறையில் பிணங்களை வைப்பதற்கு தனியே ஒரு பதிவேடு பராமரிக்கப்படும் என்றால் சரிதான். அது மருத்துவமனை கண்காணிப்பாளரின் வசம் இருக்கும் என்றால் சரிதான். காவல் துறை அதிகாரியோ அல்லது மருத்துவ அதிகாரியோ உரிய சான்றளித்தால் மட்டுமே பிரேதம் மேற்படி பிணவறையில் அனுமதிக்கப்படும் என்றால் சரிதான். வழக்கமாக மாலை 05.00 மணிக்கு முன்னர் பிரேத பரிசோதனை செய்யப்படும் என்றால் சரிதான்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது.**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 16 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. ஆனந்தராஜ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5th day of March 2026.

**(A1, A2 Present. )**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது தென்காசி காவல் நிலையத்தில் தனிப்பிரிவு தலைமை காவலராக பணிபுரிந்துவருகிறேன். இதற்கு முன்பு தென்காசி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது கடந்த 23.04.2022 அன்று இரவு 08.00 மணிக்கு தென்காசி காவல்நிலைய குற்ற எண். 244/2022 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 302, 506(ii) IPC வழக்கின் விரைவு முதல் தகவல் அறிக்கையை தென்காசி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு. கற்பகராஜா

என்பவரிடமிருந்து பெற்று இரவு 08.30 மணிக்கு நீதித்துறை நடுவர், தென்காசி அவர்களிடம் ஒப்படைத்தேன். பின்பு 25.04.2022 அன்று மேற்படி வழக்கில் இறந்த மாரிச்செல்வம் என்பவரது பிரேத விசாரணை அறிக்கையை மதியம் 12.15 மணிக்கு நீதித்துறை நடுவர், தென்காசி அவர்களிடம் ஒப்படைத்தேன். இந்த பணிக்காக எனக்கு வழங்கப்பட்ட **கடவுச்சீட்டுகள் அ.சா.ஆ. 10 வரிசை (2 எண்ணம்)** ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வழக்கு சம்பவ காலக்கட்டத்தில் தென்காசி காவல் நிலையமும், குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் அடுத்தடுத்து அமைந்திருந்தன என்றால் 100 மீட்டர் இடைவெளி இருக்கும். முதலில் ஒரு வழக்கு பதிவுசெய்யப்பட்டு, அது மறைக்கப்பட்டு பின்னிட்டு ஒரு வழக்கு பதிவுசெய்யப்பட்டு நீதிமன்றம் அனுப்பியதால்தான் காலதாமதம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது.**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

Depositions of Witness for Prosecution Pw 17
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு. கலைச்செல்வன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5th day of March 2026.

**(A1, A2 Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது சுரண்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்துவருகிறேன். இதற்கு முன்பு தென்காசி காவல் நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணியில் இருந்தபோது, தென்காசி காவல்நிலைய குற்ற எண். 244/2022 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 302, 506(ii) IPC வழக்கில் இறந்துபோன நபரான மாரிச்செல்வம் என்பவரது உடைமைகளை நீதித்துறை நடுவர், தென்காசி அவர்களிடமிருந்து PR No. 289/2022 பெற்று நீதிமன்ற

உத்தரவு படி திருநெல்வேலி தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இந்த பணிக்காக எனக்கு வழங்கப்பட்ட **கடவுச்சீட்டு அ.சா.ஆ. 11** ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | Prosecution Pw 18 | |
| | Defence | |
| | Court | |

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஆனந்த் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5th day of March 2026.

**(A1, A2 Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது துணை போக்குவரத்து ஆணையர், ஈரோடு அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள செயலாக்கப்பிரிவில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்துவருகிறேன். நான் கடந்த 25.04.2022 அன்று தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணியில் இருந்தபோது, தென்காசி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் அளித்த வேண்டுகோள் கடிதத்தின் பேரில் TN-72-BJ-6466, TN-76-P-3363 மற்றும்

TN-76-AC-7923 ஆகிய வாகனங்களின் உரிமையாளர்கள் விவரங்கள் உள்ளடக்கிய எனது அலுவலக ஆவணங்களை சான்றொப்பமிட்டு அளித்தேன். அவை **அ.சா.ஆ.12 வரிசை (3 எண்ணம்)** ஆகும். இதுகுறித்து காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.</u>**

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi